


ISC
TAKE YOU TO HEIGHTS

# எனக்காக ஒரு நிமிடம் ப்ளீஸ்!...

இது ஒரு குழந்தையின் ஏக்கம்...

யுவா பத்மநாபன்

# சமர்ப்பணம்

என்னை நானாக்கிய என் தாயிற்கு!

பாசத்துடன்

## இரா. பத்மநாபன்

M D - YUVA 2.0,

C M D - ISC,

Director - YUVA Foundation.

ISC
TAKE YOU TO HEIGHTS

சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆசியுடன்



# உனக்குத் தேவையான எல்லா வலிமையும், நம்பிக்கையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

என் குருவிற்கு என் வாழ்க்கை சமர்ப்பணம்.

அன்புடன்,

**இரா. பத்மநாபன்.**

M D - YUVA 2.0,
C M D - ISC,
Director - YUVA Foundation.



yuva 2.0

SCHOOL OF HUMAN EXCELLENCE

# ENAKAGA


## ORU NIMIDAM PLEASE!

### Oru Kulanthaien Yeakkam...

**by YUVA PADMANABHAN**

## ISC's MILESTONES

ISC Towards a Developed INDIA




## 7 WONDERS OF OUR ACHIEVEMENTS

**5 Million** lives transformed so far. Marching ahead to impact **10 Million** lives by **2025**

ISC
TAKE YOU TO HEIGHTS

INTERNATIONAL STRATEGIC CONSULTANTS
Publications

# ENAKAGA ORU NIMIDAM PLEASE!

Oru Kulanthaien Yeakkam...

by YUVA PADMANABHAN

ISBN NO: : 978-81-946966-3-6

ISC | INTERNATIONAL STRATEGIC CONSULTANTS

TAKE YOU TO HEIGHTS

ISC is a business conglomerate based out of Coimbatore, Tamilnadu, having vast experience and interests in varied fields of Education, Health Care, SME & MSME, Technology, Real Estate, Media and Social Activities.

Strict business ethics aligned with great customer satisfaction has made the group reach greater heights. ISC's principles and philosophies are structured based on Abdul Kalam's and Vivekananda's vision and hence this book is dedicated to all the children of the globe with Nation Building as its core aim and target.

For further details:

connect to us: info@isc.bz

**TEAM**

AUTHOR **YUVA PADMANABHAN** | EDITOR **K. Nithya, CEO, MCC**

Published by **ISC Publications** | Research Team **D. Panneer Selvan, N. Bhuvaneshwari, Jeyanthi Saravanan** | Digital publication **Hari Krishnan, Ravi Kanthan, Uma Subramani, N.S. Krishna, Manoj** | Designing **Mohana sudhan.M, M. Balasubramanian**

Copyright @ ISC 2020

# ஆசிரியரைப் பற்றி

கடந்த 30 ஆண்டுகளாக ஆசிரியரது மனம் சமூகம் சார்ந்த சிந்தனைகளில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றது. எனவே உலக அளவிலான பூர்ணவித்யா, தேசிய அளவிலான மிஷன் சம்ரிதி, தமிழக அளவிலான நல்லோர் வட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புகளுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.



இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம்

யுவா பத்மநாபன்

தேசிய அளவிலான கல்விப் பணிகளில் ஈடுபட்டுக் கல்வி முறையிலும், பாடத்திட்டத்திலும் காலத்திற்கு ஏற்ற மாறுதல்கள் செய்ய ஆழமாக இயங்கி வருகிறார். கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்குத் திறன் மேம்பாட்டுக்கான உயர்மட்ட ஆலோசகராக இருந்து வருகிறார். தொழில் திறன்கள் மற்றும் சுய வேலைவாய்ப்பு ஆகியவற்றை உருவாக்கி, இளைஞர்களுக்கான சுய சார்பு சிந்தனைகளை வளர்க்கத் தீவிரமாகப் போராடி வருகிறார். சமூகக் கட்டமைப்பை சீரமைக்க சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள், மேதகு அப்துல் கலாம் அவர்கள், மகாத்மா காந்தி, மகாகவி பாரதி, சுவாமி விவேகானந்தர் போன்றோர் சிந்தித்தவற்றை சமூகத்தின் நடைமுறைகளாக மாற்றத் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார்.

ஆசிரியர் குழந்தைகளின் கல்விக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஆகச்சிறந்த உள்ளங்கள் ஆன திருமதி பிரேமா டேனியல், திருமதி மீனா சுவாமிநாதன், குழந்தைகள் மனநல மருத்துவர் டாக்டர். வெங்கட்ரமணி, ஆகச்சிறந்த சக்திகளை உருவாக்கும் திரு ரவி ஜி மற்றும் சுவாமினி பிரம்மானந்தா, சுவாமி சித்தபோதனந்தா ஆகியோருடன் தீவிரமாக பயணித்து குழந்தைகளுக்கான பல்கலைக்கழகத்தை உருவாக்கி அதன்மூலம் நல்ல இளைஞர்களை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டு யுவா என்ற அமைப்பினை உருவாக்கி, அதன் மூலமாக நமது நாடு மட்டுமன்றி அயல்நாடுகளிலும் பயணித்துக் கொண்டிருக்கிறார். நிச்சயம் அவரது யுவா 2.0 பயணம் கல்வியின் புரட்சியாக மாறும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

# யுவா 2.0 ஓர் அறிமுகம்

## Education is a Celebration

**2008** ஆம் ஆண்டில் உருவான குழந்தைகளுக்கான கல்வி முறை ஆராய்ச்சி **2011**ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான பள்ளியாக உருவானதில் இருந்து, யுவா தனது கல்வி பயணத்தை துவங்கியது. இதன் இயக்குனர் திரு. யுவா பத்மநாபன் அவர்களின் மகிழ்ச்சியில் உருவாகி, மாபெரும் சமூக மாற்றத்திற்கான அடித்தளமாக அது அமைந்துள்ளது.

கல்வி முறையிலும், பாடத்திட்டத்திலும்
**1.** உடலியல் சார்ந்த முழு அறிவு. **2.** புதியன விரும்பும் உயரிய சிந்தனை
**3.** அறத்தின் வழி மனிதப் பண்பு. **4.** மனம் உடல் ஆரோக்கிய விருத்தி
**5.** உற்சாகமான கல்வி அணுகுமுறை

எனும் பஞ்ச நோக்கங்களை கொண்டு, நாளைய தலைமுறையின் தேவைகளை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து, உளவியல் பார்வையில் உணர்ந்து, உருவாக்கப்பட்டுள்ள ஒரு கல்வி குடும்பம்தான் யுவா.




என பல களங்களில் பயணித்து உலகை அன்பும், மகிழ்ச்சியும் நிறைந்த பாதைக்கு கொண்டு செல்வோம். வாருங்கள், புதியதொரு உலகம் செய்வோம் அதில் அன்போடு மகிழ்ச்சியையும் சேர்ப்போம்.

# நூல் அறிமுக உரை

தொழில்நுட்பம் வளர்ந்துவிட்ட இன்றைய வாழ்க்கைச் சூழலில், வார்த்தைகளில் சொல்ல முடியாமல் தவிக்கும் குழந்தைகளின் மன ஏக்கங்கள் அளவிட முடியாதவை. அவற்றுக்கு முற்றுப்புள்ளி, வைத்து குழந்தைகளை மகிழ்ச்சியோடு வழிநடத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் பெற்றோர்களுக்கே மிகவும் அதிகம். குழந்தைகளின் சொல்லாத ஏக்கங்களை புரிந்து கொள்ள அவர்களால் மட்டுமே முடியும். அப்படி குழந்தைகளிடம் நாம் கவனித்து அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கிய அம்சங்களை, குழந்தைகளின் மன ஓட்டங்களை நிறுத்தி, எழுத்துக்களாக மாற்றி, இந்த புத்தகம் படைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் பெற்றோர்களின் பார்வையிலும், குழந்தைகளின் நம்பிக்கையிலும், சமுதாயத்தின் வளர்ச்சியிலும் நல்ல ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம்.

அன்புடன்,

**து. பன்னீர்செல்வன்**

பொறுப்பாளர், YUVA 2.0

# வாழ்த்துரை

பள்ளிகள் பல விதமாக இயங்கிவரும் இந்தச் சூழலில் அனுதினமும் பள்ளிக்கூடம் சிறப்புற இயங்க வேண்டும் என்ற M C C குழுமம் எடுத்துச் செல்லும் இம்முயற்சிக்கும், எண்ணங்களை வடிவாக்கிய செயலுக்கும், இக்கட்டுரையை அனைவருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அவர்களின் அவாவிற்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகள் பற்பல! அவர்களின் கனவுகள் நனவாக மனமார்ந்த வாழ்த்துக்கள்!. கல்விப்பணிச் சிறக்க வேண்டும் எனில், சமுதாய நலன், சவால்களை சமாளிக்கும் அணுகுமுறை, ஒவ்வொரு குழந்தையின் ஆற்றலையும் வெளிக்கொணர்தல் போன்றவற்றில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும். Yuva 2.0,அதற்கான அடித்தளத்தை உருவாக்கி, குழந்தைகளை சிறப்பான ஆளுமைகளாக மாற்ற விரும்பும் அனைத்து நல் உள்ளங்களுடன் இணைந்து பணியாற்ற தயாராக உள்ளது. நாளை உலகை நல்லதொரு உலகாக்குவோம்.

நன்றியுடனும், வாழ்த்துக்களுடனும்,

**சுமதி ரவிச்சந்திரன்**

CEO, Yuva 2.0

# எனக்காக
# ஒரு நிமிடம் ப்ளீஸ்!..



# அக அழகு

அகத்தின் தேவதைகள் கூறும்போது எனது அக அழகே எனது வெற்றிக்கு காரணம் என்கிறார்கள். அம்மா அகத்தின் அழகு என்றால் என்னம்மா? அகம் என்றால் மனசு தானே அம்மா?.

நல்ல உடைகள் அணிந்து, அலங்காரங்கள் செய்து, புற உடலை அழகுபடுத்திக் கொள்ள சொல்லிக் கொடுத்தீர்கள்.

அகத்தின் அழகை எப்படி அம்மா உணர்வது?

அப்பா, எனக்கும் அகத்தினை அழகு படுத்திக்கொள்ள ஆசையாய் இருக்கிறது. அகத்தை அழகுற வைக்க என்னவெல்லாம் செய்ய வேண்டும்?



# உடல் மொழி

உலகில் ஆயிரம் மொழிகள் இருப்பினும் உடல் மொழியே சிறந்தது என என் பள்ளியில் கற்றுத்தருகிறார்கள். அந்த உடல் மொழியை வலுவாக வைத்துக் கொண்டால் உலகையே வெல்லலாம் என்று சொல்கிறார்கள். அது உண்மையா அம்மா?



## வாழும் கலை

நாம் அன்றாடம் வாழ்வதற்கு வீட்டிற்கு ஒரு நூலகம், வீட்டிற்கு ஒரு மருத்துவ குணம் கொண்ட செடிகள், வீட்டிற்கு ஒரு பாட்டி வைத்தியம், வீட்டிற்கு ஒரு மரம் இவை எல்லாம் இருந்தால் நமது வீடே நிச்சயமாக வாழும் கூடமாக மாறும் என தோன்றுகிறது. நாம் அதை விட்டுவிட்டு ஏனம்மா வீட்டில் இன்னும் அதிகமான மருந்துகளையும் உண்ணக்கூடாத தின்பண்டங்களையும் உடலுக்கு பாதிப்பைத் தரும் கதிர் வீச்சுக்களையும் நோக்கி பயணிக்கிறோம் அம்மா?




# அடையாளங்களை அங்கீகரிப்போம்

நான் தினசரி உங்களைப் பார்க்கும் போதும், நற்செயல்களைச் செய்யும் போதும்
உங்களைக் கூர்ந்து கவனிப்பேன் என்னைப் பாராட்டுவீர்கள் என்று.
ஆனால் உங்களுக்கு அதை கவனிக்கக்கூட நேரம் இல்லையே!
என் தவறுகளைச் சுட்டிக் காட்டத் தெரிந்த உங்களுக்கு
ஏன் என் நற்செயல்களை பாராட்டத் தெரிவதே இல்லை?
அடையாளங்களை அங்கீகரித்தால் தான் அது பதிவுகளாக மாறும்.
அவ்வாறு உருவாகும் பதிவுகளே
நாளை வரலாறாக மாறும் என்று உங்களுக்குத் தெரியுமா?



# கல்வி சுகமானது

பூலோகத்தில் உள்ள விஷயங்களைப் பற்றி கற்றுத் தெரிந்து கொள்ள புவியியலையும்,
நமது ஆண்ட அனுபவங்களைப் பற்றி கற்றுத் தெரிந்து கொள்ள வரலாற்றினையும்,
நமது வாழ்க்கையின் ஆராய்ச்சிகளைப் பற்றி கற்றுத் தெரிந்து கொள்ள அறிவியலையும்,
எவ்வாறு திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்பதற்காக கணக்கினையும்,
இதையெல்லாம் சொல்வதற்கு மொழிகள் தேவை என்ற அவசியத்தினையும்
நீங்கள் சொல்லிக் கொடுத்திருந்தால் நான் அனைத்து பாடங்களிலும்
சிறந்தவழி உயர்ந்து இருப்பேன் என்று தோன்றுகிறது.
ஏன் நீங்கள் படிப்பின் முக்கியத்துவத்தைக் குறித்து சொல்லித் தரவே இல்லை?




## புதியன விரும்பும் உயரிய சிந்தனை

உங்களுக்கு வேலை இருக்கும்பொழுது என்னை தொலைக்காட்சி பார்க்கவும், உங்களுக்கு செல்போனில் வேலை இல்லாத பொழுது, அதனை நான் பயன்படுத்தவும் அனுமதித்தீர்கள். அவற்றை எனக்கு காட்டாமலே இருந்திருந்தால் அதைப்பற்றி எனக்குத் தெரியாமலே இருந்திருக்கும். உங்களுக்கு என்னுடன் நேரம் ஒதுக்க முடியாததால் எனக்கு தொலைக்காட்சியையும், செல்போனையும் அறிமுகம் செய்தீர்கள். எதற்காக இன்று என்னை தவறு என்று கண்டிக்கிறீர்கள்?

அதனைப் பயன்படுத்தும் முறையினைப் பற்றியும் அதன்மூலம் எவ்வாறு கற்றுக்கொள்வது என்பதனையும் கற்றுக் கொடுத்திருந்தால், நான் அதனை அறிந்து சிறந்த வகையில் பயன்படுத்தி இருப்பேனோ?




# விலையுயர்ந்த பரிசு

நான் விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு விளையாடும் போது
ஒவ்வொரு நாளும் நானே தனியாக வித விதமான கோபுரங்களைக் கட்டி மகிழ்வேன்.
கப்பலையும், ஆகாய விமானத்தையும், விண்கலன்களையும் உருவாக்குவேன்.
அவ்வாறு உருவாக்கும் போது என் அருகில் நின்றாலே போதும்
நான் இமயத்தை தொட்டதைப் போல உணர்வேன்
சற்று நேரம் நீங்கள் என்னுடன் நிற்பீர்களா?
அவ்வாறு நீங்கள் என்னுடன் இருக்கும் நேரம், என் வாழ்க்கைக்கு நீங்கள் தரும் ஒரு
உன்னதமான பரிசு என்பதை அறிவீர்களா?




# என் நம்பிக்கைக்கு நம்பிக்கை ஊட்டுங்கள்

தினமும் அலுவலகத்தில் மீட்டிங் இருக்கின்றது என்று சொல்கிறீர்கள்

என்றாவது எனக்குப் பள்ளியில் மீட்டிங் இருக்கும் பொழுது

ஏன் நீங்கள் வருவதே இல்லை?

நீங்கள் வரும் அந்தத் தருணம் என்மேல் நான் வைத்திருக்கும்

நம்பிக்கை நிச்சயம் உயரும்

என் நம்பிக்கைக்கு நம்பிக்கை தருவீர்களா?

அவ்வாறு நம்பிக்கை தந்தால் நிச்சயம் நாளை நான் நம்பிக்கை நட்சத்திரமாக

உருவெடுப்பேன் என்று உணர்வீர்களா?




# குழந்தைகளின் குதூகலப்பல்கலைக்கழகம்

அம்மா, பிள்ளைகள் அம்மாவின் கருவிலே திரு ஆகலாம் என அபிமன்யு, பிரகலாதன் கதைகள் மூலமாக எனக்கு கற்றுக் கொடுத்தீர்கள். கற்பதிலும் எளிமை, கற்றுக் கொடுப்பதிலும் எளிமை என்ற தத்துவார்த்தத்தை உணர்ந்த பள்ளிக்கூடங்கள், கற்றலே கல்வி என்ற அடையாளத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடங்கள், விளையாட்டுக்கும், வாழ்வியல் விழுமியங்களுக்கும், முக்கியத்துவம் கொடுக்கும் பள்ளிக்கூடங்கள், நிச்சயமாக குழந்தைகள் பல்கலைக்கழகத்திற்கு இணையானவை என்று நீங்கள் உணர்ந்து என்னை அங்கு சேர்த்து இருக்கலாமே அம்மா? அவ்வாறு சேர்த்திருந்தால் எனக்கு ஒட்டுமொத்த வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கும் என தோன்றுகிறது. நான் கேட்பது சரிதானா?



## படைப்பாற்றல்

வீட்டிலிலிருந்து கொண்டே பல கதைகளை
பலரிடம் நீங்கள் சொல்கிறீர்கள்,
ஆனால் நான் உறங்கும் முன்
ஒரு கதை சொல்வீர்களா என்ற ஏக்கத்துடன்
கேட்கும்பொழுது ஏன் அப்பா கோபப்படுகிறீர்கள்?
உங்களுக்குத் தெரியுமா
நான் கதைகளை அதிகம் கேட்டால்
என் படைப்பாற்றல் வளரும் என்று?



# நிலாச்சோறு

மொட்டை மாடியில் நின்று கொண்டு
நட்சத்திரங்களை எண்ணிக் கூட்டல் கழித்தல் போடவும்
நிலாவில் விண்கல பள்ளிக்கூடம் நடத்தவும்
அந்தப் பள்ளிக்கூடத்தில் அப்பாவுடனும் அம்மாவுடனும் விளையாடவும்
மனம் மிகுந்த ஆசைப்படுகிறது.
ஏன் நீங்கள் என்னை மொட்டை மாடிக்கு அனுப்புவதே இல்லை?
மொட்டை மாடி, இந்த சவால்கள் நிறைந்த உலகை சரியாக எதிர்கொள்ளும் அளவிற்கு,
எனது தகுதிகளை உயர்த்தி விடும் என அறிவீர்களா?



## உன்னதமான உறவுகள்

அம்மா...
நம் வீட்டில் உள்ளவர்களோடு மட்டுமே எப்போதும் இருக்கிறோம்.
உங்களுக்கு இருக்கும் வேலையில் என்னை தாத்தா, பாட்டி வீட்டிற்குக்கூட
வருடத்துக்கு ஒரு முறையே கூட்டிட்டு போறீங்க.
நிறைய உறவுகளோடு இருப்பதில் அன்பும்,
நம்பிக்கையும் வளரும் என்கிறார்கள்.
நாம் ஏனம்மா தாத்தா, பாட்டியுடன் ஒன்றாக
நம் வீட்டில் இருக்கக்கூடாது?
நல்ல நண்பர்களை நான் எப்படி தேர்ந்தெடுப்பது
என்று எனக்கு சொல்லிக்கொடுங்கள் அப்பா.



# வாழும் வரை விளையாடுவோம்

அம்மா இந்த கம்ப்யூட்டர் கேம்ஸ், போன் விளையாட்டுகள் விளையாடும்போது என் உடல் நிலையிலும், கண்ணிலும் பல குறைகள் வருகின்றன. எனக்கே தெரிகிறது. நானும் கூட சச்சின், தோனி, விஸ்வநாதன் ஆனந்த்,சிந்து போன்று பெரிய விளையாட்டு வீரனாக வேண்டும் என ஆசையாக இருக்கிறது.

அதுபோன்று நான் உருவாக எனக்கு வழி காட்டுங்கள் அம்மா. எனக்குள் இருக்கும் திறமைகளை அடையாளம் கண்டு என்னை நல்வழிப் படுத்துவீர்களா அம்மா.



# வியத்தகு விந்தைகள்

அம்மா! மரங்கள், செடிகள், கொடிகள், நட்சத்திரங்கள், சூரியன், மழை, மலைகள், காடுகள்

என பலவற்றையும் பார்க்கும்போதுஆசையாக இருக்கிறது.

இவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளவும் நினைக்கின்றேன்.

சுற்றிக்கொண்டே இருக்கும் பூமியின் உள்ளே தங்கம், வைரம், வெள்ளி என பல விலையுயர்ந்த  பொருட்கள் இருப்பதாகவும் சொல்கிறார்கள்.

அவை எல்லாம் எப்படி அம்மா உருவாகின்றன?  இன்னும் என்னவெல்லாம் நமது பூமியில் இருக்கின்றன? அவை எல்லாம் எப்படி இயங்குகின்றன?

இந்த ஆச்சரியங்களை பற்றி எல்லாம் எனக்கு கொஞ்சம் சொல்லுங்களேன் அம்மா.



# மனத்திண்மை

நீங்கள் இருவரும் பல நேரங்களில் கவலையான முகத்துடன் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் உலகில்பல இயற்கைப் பேரழிவுகளும், பல புயல்களும், ஆபத்துகளும் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றிற்கு நாம் புதிய புதிய பெயர்களை வைத்து, நண்பர்களின் பெயர்களைப்போல, அவற்றை பற்றி பேசுவதும், சாதாரணமாக ஆகிவிட்டதே அப்பா.

சிறு சிறு விஷயங்களுக்கே பெரிதாக கவலைப்படும் நீங்கள்,
எப்படி என்னை பெரும் சவால்களை எதிர் கொள்ளும்
ஆற்றல் கொண்டவனாக வளர்க்க முடியும் அம்மா?




# அன்புச்சண்டை ஆரோக்கியமானதே

நீங்கள் ஏதாவது விஷயத்திற்காக சத்தமாகப் பேசிக் கொள்ளும்போது

எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது.

என் அண்ணனோடு நான் சண்டையிட்டாலோ, தங்கையோடு

சண்டையிட்டாலோ தவறு என்கிறீர்கள். நீங்கள் சண்டையிடுவது மட்டும் சரியா?

அன்பு கலந்த பேச்சுக்களே தீர்வு என்று ஆகிவிட்ட பிறகு சண்டையிட்டு என்ன பயன்?

தயவு செய்து சொல்லுங்களேன்?



# அடிப்படை உரிமைகள்

அம்மா எங்கள் ஆசிரியர் உணவு, உடை,  இருப்பிடம் என்பது
உயிர்களின் அடிப்படைத் தேவைகள்என்று சொல்லிக்கொடுத்தார்.
ஆனால் அதில் ஒன்றான தண்ணீரைக் கூட நாம்
பணம் கொடுத்துதான் வாங்குகிறோம். காற்றைக் கூட
இனி நாம் காசு கொடுத்து வாங்க வேண்டிய
அவசியம் ஏற்படும் என்கிறார்கள். உண்மையா அம்மா?
ஆறறிவுள்ள மனிதர்களாகிய நமக்கே இந்த நிலைமை என்றால்,
மற்ற உயிரினங்கள் எல்லாமே இந்த பூமியில் தானே வாழ வேண்டும் அம்மா,
அவை தங்களின் அடிப்படைத் தேவைகளுக்கு என்னதான் செய்யும்?
அவற்றிற்கும்  இங்கே நாம் தானே பொறுப்பேற்க வேண்டும்?
அனைத்திற்கும் பணம் தான் பிரதானமா அம்மா?



# சேமிப்பு - இன்றையஅத்தியாவசிய தேவை


நீங்கள் உங்கள் வேலை ரீதியாக யார் யாருக்கோ பதில் சொல்லிக் கொண்டிருப்பதை கேட்கிறேன். அப்போதெல்லாம் நானும் கூட இப்படித்தான் வேலை நிமித்தமாக யாருக்காவது பதில் சொல்ல வேண்டி இருக்குமோ? என்ற கவலை வருகிறது.

நாமே சுயமாக ஒரு தொழிலினைக் கற்றுக் கொண்டு நம் வருமானத்தையும், சேமிப்பையும் நாமே முடிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாமே. சிக்கனமும், சேமிப்பும் தான் நம் நிகழ்காலத்தையும், வருங்காலத்தையும் காக்கும் என்பதை நீங்கள் அறிவீர்களா?



# ஆளுமைகளின் ஆளுமை

நமது வீதியில் உள்ள செடிகளையும், கொடிகளையும்,
எனது பக்கத்து வீட்டு டாமியையும், அடுத்த வீட்டு தாத்தாவையும் பார்க்க
எனக்கு மிகுந்த ஆசையாக உள்ளது.
இரவு உணவிற்குப் பின் உங்கள் இருவரின் கைகளையும்
கோர்த்துக் கொண்டு நடுவில் நான் நடந்து செல்ல மிகுந்த ஆர்வமாகக் காத்திருக்கிறேன்.
அழைத்துச் செல்வீர்களா?
அவ்வாறு அழைத்துச் சென்றால் நான் சமுதாயத்தையும், உங்களது உணர்வுகளையும் புரிந்து,
நல்லதொரு ஆளுமையாக மாறுவேன் என்று உங்களுக்குத் தெரியுமா?


Mommy Lab

# எனது இலக்கணம்

ஒவ்வொரு மனிதனும் தன் வரலாற்றை, உலகம் எழுதும்படி வாழ்க்கை வாழவேண்டும்.

என்று அப்துல் கலாம் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

என்னை நீங்கள் அந்த வழியில்தான் வளர்க்கிறீர்களா அப்பா?

அதற்கான தகுதிகள் எனக்கு இருக்கிறதா அம்மா?

எப்பொழுது எனது அடையாளங்களை பதிவுகளாக்கப் போகிறீர்கள்?

எனது சுயசரிதை புத்தகம், உலக மக்களுக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டி நூலாய் அமைய,

நான் இப்பொது என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும்? என்று வழிகாட்டுங்களேன்



## தேசமே சுவாசம்

அப்பா, நம் நாட்டின் சுதந்திரத்திற்கும்,
மக்கள் சந்தோசமாக வாழவும், கொடிகாத்த குமரன்,
நேதாஜி, விவேகானந்தர் போன்ற பலர் தங்களின் வாழ்வையும்,
உயிரையும் கூட தியாகம் செய்து இருக்கிறார்கள். ஆனால்
இப்போதெல்லாம் நீங்கள் அப்படி எதுவுமே செய்வதில்லையே!
நமது ராணுவம், கப்பல் படை, விமானப் படை வீரர்களுக்கு
மட்டும் தான் தேசத்தின் மீது பற்று இருக்க வேண்டுமா?
நம் பாரத தேசத்தின் மீது, அதன் மக்களாகிய நாமும் பற்றுடன்
இருந்தால், அவர்களின் சுமையும் சற்று குறையும் அல்லவா?
தேச பற்று, தேச பக்தி பற்றி நான் நிறைய தெரிந்துகொள்ள
விரும்புகிறேன் அப்பா. சொல்லுங்களேன்.



# ஏக்கங்களின் ஏக்கம்

அப்பா, நம் நாட்டின் சுதந்திரத்திற்கும்,
மக்கள் சந்தோசமாக வாழவும், கொடிகாத்த குமரன்,
நேதாஜி, விவேகானந்தர் போன்ற பலர் தங்களின் வாழ்வையும்,
உயிரையும் கூட தியாகம் செய்து இருக்கிறார்கள்.
ஆனால் இப்போதெல்லாம் நீங்கள் அப்படி எதுவுமே செய்வதில்லையே!
நமது ராணுவம், கப்பல் படை, விமானப் படை வீரர்களுக்கு
மட்டும் தான் தேசத்தின் மீது பற்று இருக்க வேண்டுமா?
நம் பாரத தேசத்தின் மீது, அதன் மக்களாகிய நாமும் பற்றுடன் இருந்தால்,
அவர்களின் சுமையும் சற்று குறையும் அல்லவா?
தேச பற்று, தேச பக்தி பற்றி நான்
நிறைய தெரிந்துகொள்ள விரும்புகிறேன் அப்பா. சொல்லுங்களேன்.

ஆசிரியரின்

"கலாமிற்காக ஒரு நிமிடம் ப்ளீஸ்"

Download Link: http://internationalstrategicconsultants.com/publications/

புத்தகம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ள இந்தச் சூழலில் ஆசிரியரின் அடுத்த படைப்பான "எனக்காக ஒரு நிமிடம் ப்ளீஸ்" என்ற புத்தகம் ஒரு குழந்தையின் ஏக்கங்களை எழுத்து வடிவில் வெளியிட்டு இருப்பது பல பெற்றோர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்று மனப்பூர்வமாக நம்புகிறோம். குழந்தைகளின் ஏக்கங்கள் குறையட்டும், சிறந்த தேசம் உருவாகட்டும்.

அவரது இது போன்ற படைப்புகள், படைப்புகளுக்குப் பெருமை சேர்க்கும். அவர் வாழும் இந்த பிறவியில் நாமும் பயணிப்பது நாம் செய்த புண்ணியம்..

Powered By ISC TAKE YOU TO HEIGHTS | REALTY - EDUCATION - HEALTH CARE - SME's - TECHNOLOGY

# நன்றியுரை

ஆசிரியர் தனது கல்விப் பயணத்தில் பல்வேறு பெற்றோர்களை சந்தித்துள்ளார். பல குழந்தைகளின் எண்ண அலைகளையும், மன உணர்வுகளையும் பதிவு செய்துள்ளார். அவரை ஆசிரியராக, கல்வியாளராக, பேச்சாளராக, சிறந்த வழிகாட்டியாகக் கண்ட இந்த சமூகத்தில், எழுத்து எனும் கருவறைக்குள் அவர் பயணித்து இருப்பது எழுத்துக்கு பெருமை சேர்க்கிறது. அவர் உருவாக்கிய யுவா என்ற குழந்தைகளுக்கான பாடத்திட்டம், இன்று கடல் கடந்து பல்வேறு நாடுகளில் பயணிக்கிறது. யுவா2.0 வின் கல்விப் புரட்சி சமுதாயத்தை மிகவும் சீர்படுத்தும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

நன்றியுடன்,

**MCC-குழுவினர்**

"சிறந்த பெற்றோர்களாக உருவாகுவோம்
சிறந்த தேசத்தை உருவாக்குவோம்"





# எனக்காக ஒரு நிமிடம் ப்ளீஸ்!...

## இது ஒரு குழந்தையின் ஏக்கம்...

யுவா பத்மநாபன்

ISBN NO: : 978-81-946966-3-6

ISC
TAKE YOU TO HEIGHTS

INTERNATIONAL STRATEGIC CONSULTANTS
Publications

Address: NO: 17 Block, Civil Aerodrome Road and Post,
Coimbatore North Taluk, Coimbatore, Tamilnadu, India - 641 014.
Contact : +91 99438 09000, +91 99437 02000.
Website: www.isc.bz, e-Mail : info@isc.bz
Copyright @ ISC 2020